முருகப்பெருமான் துணை

**மகான் செருத்துணை நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.07.2022**, புதன்கிழமை

1. ஆறுமுகனார் அவதார சக்தியே
அறமாக வாழும் ஞானியே
மாறுதலை உலகினில் செய்ய
மாதவசியாக வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது நள்ளி திங்கள்
வரங்களென லாப திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 11 நாள், 27.07.2022 புதன்கிழமை)
வழங்குவேன் செருத்துணை நாயனார் யானும்
3. யானும் அருளாசிதனை உரைப்பேன்
உலகமக்கள் நலமும் வளமும்பெற
ஞானதேசிகன் அரங்கன் மார்க்கம்
நம்பிக்கை யூட்டி காக்கும் வண்ணம்
4. வண்ணமுடன் ஆற்றலாக இருக்க
வணங்கி மக்களெல்லாம் வர
எண்ணமெல்லாம் தூய்மை கூடி
இறைபலமோடு வாழ நேரும்
5. நேருமை கொண்ட செயல்பாடும்
நீதி நெறி பின்பற்றும் வாழ்வாய்
வருமுலகில் மக்கள் சமூகம்
வளர்ச்சிநிலை அடையக் கூடும்
6. கூடவே சரவண ஜோதி ஏற்றி
குறைவிலா நாளும் ஞானிகள் பூஜை
தடையற மக்களெல்லாம் தொடர
தரணியில் மாற்றம் தானும்
7. தானாக ஞானிகளின் பலமாக
தாமுரைப்பேன் நடந்தேறக் கூடும்
ஞானமாக அரங்கன திருவடி
நாட்டிடுவேன் உலகோர் பற்றிவருக
8. வருகவே சர்வ சூட்சுமங்களுடன்
வந்தடையும் எல்லா பலமும்
முருகப் பெருமான் அருள் தயவும்
முழுமை ஞானமும் கண்டடைய நேரும்
9. அடையவே தானதருமங்களும்
அரங்கன் வழி காட்டலில் பெருக
தடையற தருமலோகம் ஆகி
தரணியே இயற்கை வளமுடன்

10. வளமுடன் எல்லா வகையும்
வல்லமையும் பாதுகாப்பும் கூடி
பலமுடன் ஞானவான் படைகள்
பாருலகம் எங்கிலும் பெருகி

11. பெருகியே ஞான ஆட்சி
பிசகின்றி உலகம் அடையும்
முருகப்பெருமான் தலைமை காணும்
மொழிந்திட்ட அருளாசி முற்றே

–சுபம்–